## கலென்பிந்துனுவெவ பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

### 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 18 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 20 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடு வருமானம் செலவினம், சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களாக சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 01 | கணக்கிடப்பட் டவில்லை | - | - | - |
| (ii) | - மேற்படி - | 01 | - | - | - | 578 |
| (iii) | - மேற்படி - | 01 | - | - | 541 | |
| (iv) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 54 | - | - | |
| (v) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | - | - | 94 |
| (vi) | - மேற்படி - | 01 | 896 | - | - | - |
| (vii) | - மேற்படி - | 02 | - | - | 680 | - |
| (viii) | பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 24 | - |
| (ix) | - மேற்படி - | 01 | - | 359 | - | - |

(ஆ) 1999 ஆண்டின் போது செய்யப்பட்ட தடாக நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்காக சபையிடமிருந்து அறவிட வேண்டியிருந்த நிதியினை அறவீடு செய்வதற்காக 2001 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த காரரினால் பிரதேச சபைக்கு எதிராக நீதிமன்ற வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அவ் வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் 2011 செப்தெம்பர் மாதத்தின் போது சபையின் அசையும் சொத்துக்கள் நீதிமன்றத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,803,259 ஆக இருந்ததுடன், புத்தகங்கள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 2,475,293 ஆக இருந்தது.

### 1.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாறு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றின் நடைமுறைக் கணக்குகளின் காசேட்டின் பிரகாரம் மீதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தும் அவ்வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

| | 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | | |
|---|---|---|---|
| **வங்கி நடைமுறைக் கணக்குகள்** | **காசேட்டின் பிரகாரம் மீதி** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி** | **வேறுபாடு** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| இலங்கை வங்கி – பொதுக் கணக்கு | 763,589 | 1,830,125 | 1,066,536 |
| மக்கள் வங்கி – வேலைக் கணக்கு | 427,516 | 1,682,606 | 1,255,090 |

(ஆ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,192,752 ஆக இருந்ததுடன் பரிட்சை மீதியின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,943,934 ஆகும். வேறுபாடுகளுக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்டநிதியம் மற்றும் பிரிவுகளின் கூட்டுத்தொகை ரூபா 9,495,523 ஆகவும், ஐந்தொகையில் அது ரூபா 7,918,881 ஆகவும் காட்டப்பட்டிருந்தும் அவ்வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 97,157,490 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ளமுடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண அதிகாரச் சட்டம் | வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம், வியாபாரத்தலங்களை வாடகைக்கு விடல், அறிவித்தல் பலகை வருமானங்கள் மற்றும் பொதுச் சந்தை வாடகைக்குவிடல்களுக்கான முத்தரைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆம் பிரிவு | மாதாந்தம் ரூபா 50,000 அல்லது வருடத்திற்கு ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற நிலையான கொடுப்பனவுகளின் போது அக்கொடுப்பனவுகளின் அடிப்படையில் 5% ஆன நிறுத்தி வைத்தல் வரியினை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறப்பட்ட எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்க வில்லை. |

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவை

---

விதி இலக்கம் 207

(i) களஞ்சியம் மற்றும் பொருட்கள் வழங்கலில் இயலுமான வரை பொதுப் போட்டியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் ரூபா 328,438 பெறுமதியான பொருட் கொள்வனவுகளின் போது மீளாய்வாண்டில் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கப்பட வில்லை.

(ii) நிர்மாணங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 206,177 பொருட்களுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம்

---

நிதிப்பிரமாணம் 396(ஈ)

1994 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத செல்லுப்படிக்காலம் கடந்திருந்த ரூபா 123,284 பெறுமதியான 48 காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 309,037 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 351,156 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகையை விட மேலதிகமாக ரூபா 2,846 செலுத்தப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டின் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3.1 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 1,000 | 975 | 1,160 | 400 | 317 | 676 |
| (ஆ) | வாடகை | 100 | 81 | 422 | 1,240 | 1,382 | 440 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | - | 655 | 662 | - |
| (ஈ) | ஏனைய | 3,900 | 3,004 | 1,495 | 2,976 | 8,607 | 818 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள தண்டப்பணத் தொகை ரூபா 504,975 சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.3 வீத வரி அறவீடு செய்தல்

மீளாய்வாண்டின் போது ரூபா 974,818 தொகையில் பற்றுச்சீட்டிடப் பட்டிருந்த வீதவரிப் பெறுமதியில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6.9% ஆன ரூபா 67,395 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 568,087 தொகையான நிலுவை வீதவரி வருமானத்தில் 2010 ஆம் ஆண்டில் ரூபா 11,537 ஆன 2.03% அளவு மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிலுவை 02 இலிருந்து 06 வருடங்கள் மட்டிலான காலத்திலிருந்து அறவிடப்படாது காணப்படுவதுடன் வீதவரியினை அறவீடு செய்தலின் முன்னேற்றம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது.

### 2.3.4 கடை வாடகை அறவீடு

மீளாய்வாண்டின் போது ரூபா 81,600 இற்கு பற்றுச்சீட்டிடப்பட்ட கடை வாடகை வருமானத்தில் வருடத்தினுள் ரூபா 18,500 ஆன 22.67% அளவு மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. முன்னைய வருட நிலுவை வருமானம் ரூபா 440,212 ஆக இருந்ததுடன் அத்தொகையில் ரூபா 80,900 அதாவது 13% அளவு மாத்திரமே வருடத்தினுள் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய நிலுவையான ரூபா 359,312 தொகையானது 01 இலிருந்து 08 வருடங்கள் வரையான அதிகமான காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. கடைகளை மதிப்பீடு செய்யாமல் 10 வருடங்களுக்கும் முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த வாடகை அடிப்படையிலேயே கடை வாடகைகள் அறவிடப்பட்டிருந்தன.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| <u>மீண்டுவரும் செலவினம்</u> | | | | | | |
| ஆளணி வேதனம் | 7,500 | 7,530 | (30) | 7,389 | 7,566 | (177) |
| ஏனையவை | 2,000 | 1,867 | 133 | 3,615 | 3,753 | (138) |
| உப மொத்தம் | 9,500 | 9,397 | 103 | 11,004 | 11.319 | (315) |
| மூலதனச் செலவினம் | 500 | 8,345 | (7,845) | 430 | 12,331 | (11,901) |
| மொத்தம் | 10,000 | 17,742 | (7,742) | 11,434 | 23,650 | (12,216) |

### 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01* பதில் கடமை |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 05 | 08 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 14 | 15 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 07 |
| | மொத்தம் | 20 | 31 |

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி பதவியினர் சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து சம்பளமும் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் 2010 சனவரி தொடக்கம் ஒக்தோபர் வரை அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்த 08 ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 662,220 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

அரிசி மா மற்றும் அரிசி மா உற்பத்தியுடன் அண்மித்த கைத்தொழிலுக்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டிருந்த ரூபா 541,000 பெறுமதியுடைய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன 2011 யூலை வரையிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் செயற்பாடற்று காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 835,083 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 81,792 ஆக இருந்தது.

### 2.6.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,773,096 ஆக இருந்தது.

## 2.7 நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் சுற்றாடல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கலன்பிந்துனுவெவ நகரத்தில் ஓய்வவுப் பூங்கா ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 500,551 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளிலிருந்து கலன்பிந்துனுவெவ நகரத்தின் பொது மலசலகூட அபிவிருத்தி

மற்றும் அம்மலசலகூட வளவினைச் சுற்றி வேலியும் வாயிற் கதவும் நிர்மாணிப்பதற்காக 2010 யூலை 12 ஆந் திகதி ரூபா 494,863 செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2009 இன் சுற்றாடல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு முடியாமலிருந்தது.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபைக்குச் சொந்தமான 252 – 6489 ஆம் இலக்க கெப் வாகனம் 2010 சனவரி மாதத்திலிருந்து யூன் மாதம் வரையான காலப்பகுதியினுள் நிரந்தர சாரதி கடமையாற்றிய 37 நாட்களுக்கு முறையான நியமனக் கடிதம் வழங்கப்படாத அமைய அடிப்படையிலான சாரதியொருவரினால் அவ்வாகனம் செலுத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டு அவருக்கு ரூபா 16,742 ஆன நாட் சம்பனம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதி நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோக சேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டத்தை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஒப்பந்த நிருவாகம்

2010 ஆம் ஆண்டில் மாகாண குறித்த வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாண சபையினால் செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் அதிகாரப் பிரதேசத்தின் வீதிகள் மோட்டார் கிறேடர் இடப்பட்டு செம்மைப்படுத்துவதற்காக 76 இயந்திர மணிக்காக ரூபா 259,200 செலுத்தப்பட்டிருந்தது. வீதிகளை மீளமைப்பதற்காக நேர்க்கூலி மதிப்பீடு தயாரிக்கப்படாததுடன் இக்டாாட் அறிவித்தல் பிரசுரத்தின் எஸ்சீ -1 ஆம் இலக்க நிர்மாண ஒப்பந்த நிபந்தனைக் கோவையின் 56 ஆம் பந்தியின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளுக்கான அளவிடைகளைப் பெற்று அவ்அளவிடைகளின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக இயந்திர மணி அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) வாகனக் கட்டுப்பாடு